2nd November 1966]

எல்லா பள்ளிக்கூடங்களிலுமாவது இப்பொழுது எல்லா வசதிகளும் இருக்கின்றனவா? இல்லாவிட்டால், அவற்றைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா?

கவம் திரு. எம். பக்தவத்சலம் இதிலே சப்ஜக்டுகளில் ஏதாவது ஒன்று எடுக்கப்படும். இவை எலக்டிவ்ஸ். எல்லா சப்ஜெக்டுகளுக்கும் வசதி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இல்லாமல் இருக்கலாம். இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு ஏற்பாடு செய்யப்படும். நாளாவட்டத்தில் வசதிகள் பெருகி எல்லா சப்ஜெக்டுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சார் ஆப்ஷனல் சப்ஜெக்டுகளில் கெமிஸ்ட்ரி, அல்ஜீப்ரா போன்றவை ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டால்தான் வசதியாக இருக்கும். தமிழிலே போதிக்கப்படும் போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த சப்ஜெகடுகளை ஆங்கிலத்திலேயே போதிக்க பாடபுத்தகங்களைத் தயாரித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பல ஆண்டுக் காலமாக இந்த சப்ஜெக்டுகள் தமிழிலே போதிக்கப்பட்டு வருகின்றன. கஷ்டம் ஒன்றும் இல்லை.

Free supply of text books

* 308 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to provide poor pupils studying in Elementary Schools with text books free of costs; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) A scheme for the free supply of text books to the poor pupils who are provided with the Midday Meals Scheme, has already been sanctioned by the Government.

(*b*) According to the scheme, the poor students of Standards I to III, who are admitted to Midday Meals Scheme are given free supply of a copy of Tamil Text Book. Besides, students of Standard III will get a copy of Arithmetic Text Book and students of Standard I will get a slate.

திரு. வை. சங்கரன்: பொதுவாக மிட்-டே மீல்ஸ் ஸ்கீமில் உள்ளவர்கள் மட்டும் என்று இல்லாமல், எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் இந்த மாநிலத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டிருப்பது, மதிய உணவு பெறுகிறவர்களுக்கு என்று. அவர்கள் ரொம்ப ஏழைக் குழந்தைகள் என்று முதல் மூன்று வகுப்பிலும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

[2nd November 1966

திரு. சா. கணேசன் : வசதி இல்லாத குழந்தைகளுக்குப் பாட புத்தகங்கள் இலவசமாகக் கொடுப்பதை வரவேற்கிறேன். அதே காலத்திலே, தேவையில்லாத அளவுக்கு, வசதியிருந்தாலும்கூட தேவையற்ற அளவில், ஏராளமான நோட்டுப் புத்தகங்களைச் சுமந்துகொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தம் இன்னும் எடுக்கப் படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதனால், மாணவர்களுக்கு பாரம், பெற்றோர்களுக்குப் பணவிரயம் ஏற்படுகிறது. இதை உடனடியாகக் குறைக்க, தக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் இதைக் கடந்த ஐந்தாண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதை நானும் மறக்கவில்லை. இந்த பாரம் குறையவேண்டும். ஆனால், எத்தனை நோட்டுப் புத்தகங்கள் வேண்டும் என்பதை, கல்வி நுட்பத்தைப் பொருத்துச் செய்யவேண்டும். அரசாங்கம் உத்தரவு போடமுடியாது. ஆசிரியர்களைக் கேட்டுச் செய்ய வேண்டும். இது ஆசிரியர்களுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. நா. இராசாங்கம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் இந்த புத்தகங்கள் கொடுப் பதில் வித்தியாசம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் பள்ளிகளிலும் பகல் உணவு கொடுக்கிறார்கள். மற்றும் சர்க்கார் உதவி பெறும் மானேஜ்மெண்டார் பள்ளிகளிலும் பகல் உணவு கொடுக்கிறார்கள் ; ஆனால் இந்தப் பள்ளிப் பிள்ளை களுக்கு இந்த இலவச புத்தகங்கள் பெறும் உரிமை கிடையாது. இந்த இரண்டு வகைப் பள்ளிக்கூடங்களையும் இந்தத் திட்டத்தில் சேர்த்து கொள்ள சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரிசனப் பள்ளிகள் சம்பந்தப் பட்டவரையில் விடை கனம் உள்துறை அமைச்சரைக் கேட்க வேண்டும். கல்வித் துறை மேற்பார்வையில் இருக்கும் பள்ளி களில் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. சலுகை பெறாதவர்கள் பற்றித் தெரிவித்தால் வேண்டியதைச் செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய பள்ளிகளில் இலவசமாகப் புத்தகங்கள், நோட்டுகள் கொடுக்க வேண்டும் என்று, ஆஸ்திரேலியா, ஸ்வீடன் முதலிய நாடுகள் 86,000 ரீம் பேப்பர் கொடுத்திருந்தும், நம்முடைய சர்க்கார் 36,000 ரீமை மட்டும் உபயோகித்துவிட்டு, பாக்கியைக் கெடுத்துவிட்டது, அச்சடித்து புத்தகங்கள் கூட விற்றிருக்கிறார்கள் என்று பொதுக்கணக்கு அறிக்கையில் வந்திருக்கிறது. அதன்பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் சரியில்லை. தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்கலாம்.

2nd November 1966]

திரு. கே. டி. கோசல்ராம் : சார், மதிய உணவு போடக்கூடிய எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பதாகச் சொல்கிறுர்கள். இது சம்பந்தமாக ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்து, எவ்விதம் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன என்று அறிய முயற்சி எடுப்பார்களா ? மதிய உணவு போடாத பள்ளிகளில் கொடுக்கிறுர்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம். திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப்பட்ட விவரம் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்து தெரிவித்தால் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

கல்விக்குழு

*** 309 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசு நியமித்த கல்விக் குழுவின் (கோதாரி கமிசன்) சிபாரிசுகள் அண்மையில் இம்மாநில அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் எடுத்த முடிவுகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The recommendations of the Education Commission have been received.

(b) They are being examined.

திரு. செ. மாதவன் : எற்கனவே, இந்த அரசாங்கத்திடம் கல்லூரிகளில் கால அளவை மாற்றவேண்டும் என்கிற கோரிக்கை இருந்தது. அந்தக் குறிப்பிலே கல்லூரிகளில் எத்தனை ஆண்டுகள் என்று சொல்லியிருக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எஜுகேஷன் கமிஷன் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறுர்கள். அந்தக் கருத்துக்கள் நாம் அனுசரித்து வரும் முறைகளுக்கு முரணனவையாக இருக்கின்றன. இரண்டு நாட்கள் கல்வி நிபுணர்கள் ஒன்று கூடிக் கருத்தரங்கு நடந்தினர்கள். அந்தச் சமயம், இப்பொழுது அமலில் இருக்கும் கால அளவை மாற்றுவது சரியில்லை என்று என்னுடைய கருத்தையும் நான் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். அதையெல்லாம் கருத்தரங்கு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அதற்கு மேல் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

திரு. செ. மாதவன் : ஆசிரியர்களுடைய சம்பளம் மாற்றி அமைக்கப்படவேண்டும், குறைந்தபட்ச சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று மத்திய சர்க்கார் வலியுறுத்தி இருக்கிறது ; இந்தக் குறிப்பிலேயும் காணப்படுகிறது. இந்த ஆண்டு சப்ளிமெண்டரி பட்ஜட்டிலேயே ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.